ஆண்டுகளுக்குப் பிறகும் நிரந்தரமாக்கப்படாமல் வைத்திருக்கக் காரணம் என்ன? அப்படி இருந்தால் இதுவரையில் எந்த அடிப்படையில் செய்தாலும்கூட இனியாகிலும் உத்தியோகஸ்தர்களுக்கு நிரந்தரமாக வேலை இருக்கும் என்பதிலே நம்பிக்கை ஏற்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அவர்கள் எந்த செக்ஷன் அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பு இல்லை. தொடர்ந்து மூன்று ஆண்டுகள் இருந்தும் அவர்கள் தங்கள் வேலையைப் பூரணமாக உணர்ந்து கொள்ளாத நிலையில் நிரந்தரமாக்கப்படமாட்டார்கள் என்பதற்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தபிறகு அவர்கள் நிரந்தரமாக்கப் படுவார்கள்.

திருமங்கலத்தில் மருத்துவமனை பணியாளர்களுக்கு குடியிருப்பு

* 255 வினா.— திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் பணியாற்றுவோருக்கு வீடு கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நிதி நிலைமை காரணத்தால் இவ்விஷயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: திருமங்கலம் அரசினர் மருத்துவ மனைக்கு மாற்றப்படும் மருத்துவமனை ஊழியர்களுக்கு திருமங்கலத்தில் வீடுகள் வாடகைக்கு எளிதாகக் கிடைப்பதில்லை. மருத்துவ மனைக்கு அருகாமையில் டாக்டர்களும், நர்ஸ்களும் இருந்தால் அவர்களின் பணி எளிதாக கிடைக்குமல்லவா? ஆகவே இத்திட்டம் விரைவுபடுத்தி செயல் படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நிதிநிலை சீர்பட்டவுடன் உடனே கவனிக்கப்படும்.

Vigilance Committees

* 246 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that vigilance committees are formed in slum areas in the City of Madras; and

(*b*) if so, the composition and function of the same?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: (அ) & (இ) ஆம். குடிசைப் பகுதிகளில் "மக்கள் நலக்குழு" என வழங்கும் சில குழுக்கள் ஆய்வு அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த செல்வாக்கும் தகுதியும் உள்ளவர்கள் அவ்வாறான கட்சிச் சார்பற்றோர் இக்குழுக்களின் உறுப்பினர்களாவர். குடிசைப் பகுதிகளில் குற்றங்கள் நிகழா வண்ணம் தடுப்பதும் குற்றங்களைத் துப்புத் துலக்கு வதில் காவல்துறையுடன் ஒத்துழைப்பதும் இக்குழுவின் பணிகளாகும். தீயவர்களை நல்வழிப்படுத்தும் சீர்திருத்தக் குழுவாகவும் இக்குழு செயலாற்றும்.